# PRESS NOTE

## HR & CE STATE LEVEL EXPERT COMMITTEE MEMBER ARRESTED FOR DEMAND AND RECEIVING BRIBE FOR TEMPLE RENOVATION WORK

The complainant Pitchumani Iyengar, Administrative trustee, Sri.Prasanna Venkatachalapathy Perumal Temple at Gunaseelam, Trichy approached Vigilance & Anti–Corruption, Trichy Detachment stating that the Reconstruction work of Mahadwaram & Renovation work of Praharadwaram, Garudamandapam & Thirumathilsuvar works were pending for the last 12 years in the temple. Hence a State Level Expert Committee inspected the temple on different dates. On 12.10.2022, the complainant Tr.Pitchumani met one of the State Level Expert Committee Member Tmt.Moortheeswari, (Superintendent, (Retd.)., Archaeologist Department) at the office of the Gunaseelam temple and enquired about the inspection report to be submitted for the above said temple works. At that time, Tmt.Moortheeswari, demanded Rs.10 lakhs, as bribe for processing & recommending to issue of the Inspection Report of committee members for the proposed temple works. At the request of the complainant, she reduced the bribe amount to Rs.5 lakhs & instructed the complainant to give Rs.1 lakh as advance, when she comes to trichy on 17.10.2022. In this connection a case was registered and a trap was organized yesterday 17.10.2022.

Yesterday on 17.10.2022 at 20.00 Hrs., a trap was laid against the Accused Tmt.Moortheeswari, D/o Kuppusamy, Archaeological Expert, State Level Expert Committee Member of HR&CE Dept., Chennai, and was arrested when she received the bribe money Rs.1 lakh. The bribe money was recovered. During search of her car, Rs.5 Lakhs unaccounted money was seized from her car TATA NEXON (TN94C2436). The accused was arrested.

<u>பத்திரிக்கை குறிப்பு</u>

## கோவில் திருபணிகள் செய்வது தொடர்பாக லஞ்சம் கேட்டு பெற்ற இந்து அறநிலையத் துறையின் மாவட்ட அளவிளான வல்லுநர் குழு உறுப்பினர் கைது

திருச்சி மாவட்டம் முசிறி வட்டம் குணசீலத்தை சேர்ந்த பிச்சுமணி ஐயங்கார், இவர் பிரசித்தி பெற்ற குணசீலம் ஸ்ரீ பிரசன்ன வெங்கடாஜலபதி பெருமாள் திருக்கோவிலில் பரம்பரை நிர்வாகியாக இருந்து வருகிறார், இந்த கோவிலுக்கு திருப்பணி வேலைகள் நடந்து 12 ஆண்டுகளுக்கு மேலானதால் தற்போது உபயோதாரர்கள் மூலமாக திருப்பணி நடத்த உத்தேசித்துள்ளார்கள் அதனால் அது சம்பந்தமாக முறையான அனுமதியை இந்து அறநிலைய துறையில் பெற்றுள்ளார்கள். அதற்கு மேலும் தமிழக அரசால் நியமிக்கப்பட்ட HR & CE State Level Expert Committeeயிடம் ஆய்வறிக்கை பெற வேண்டிய நிலையில் இருந்துள்ளது. அது சம்பந்தமாக மேற்படி கமிட்டியினர் கோவிலில் ஆய்வு செய்துள்ளனர், அதற்கு பிறகும் ஆய்வு அறிக்கை கோவில் நிர்வாகத்திற்கு கிடைக்கப்பெறாததால் பிச்சுமணி ஐயங்கார் HR & CE State Level Expert Committeeயின் உறுப்பினரும் மத்திய தொல்லியல் துறையிலிருந்து ஓய்வுபெற்ற வல்லுனருமான திருமதி.மூர்த்தீஸ்வரி என்பவரை கடந்த 12.10.2022 அன்று சந்தித்து ஆய்வு அறிக்கையை கேட்டதற்கு 10 லட்ச ரூபாய் லஞ்சம் கொடுத்தால் கமிட்டியிலிருந்து ஆய்வறிக்கை வழங்க இயலும் என்று திருமதி.மூர்த்தீஸ்வரி தெரிவித்துள்ளார், அதற்கு பிச்சுமணி ஐயங்கார் பத்து லட்ச ரூபாய் அதிகமாக உள்ளதாகவும் இதனை உபயதாரர்களிடம் கேட்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார், அதற்கு திருமதி.மூர்த்தீஸ்வரி, ஐந்து லட்ச ரூபாய் குறைத்துக்கொண்டு ஐந்து லட்ச ரூபாய் கொடுத்தால் தான் ஆய்வறிக்கை வழங்க முடியும் என்றும், 17.10.2022 அன்று தான் திருச்சிக்கு வரும்போது முன்பணமாக ஒரு லட்ச ரூபாய் கொடுக்குமாறும் பிச்சுமணி ஐயங்காரிடம் கேட்டுள்ளார், லஞ்சம் கொடுக்க விரும்பாத பிச்சுமணி ஐயங்கார் திருச்சி லஞ்ச ஒழிப்புத்துறையிடம் அளித்த புகாரின் பேரில் லஞ்ச ஒழிப்புத்துறை அளித்த ஆலோசனையின் பேரில் நேற்று 17.10.2022 பிச்சுமணி ஐயங்கார் திருமதி.மூர்த்தீஸ்வரியை சந்தித்து லஞ்ச பணம் ஒரு லட்ச ரூபாயை முன்பணமாக கொடுத்தார். அதை திருமதி.மூர்த்தீஸ்வரி பெற்ற போது லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார். மேலும் திருமதி.மூர்த்தீஸ்வரியின் காரை சோதனை செய்ததில் அவரது காரில் கணக்கில் வராத ஐந்து லட்ச ரூபாய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு அதுவும் கைப்பற்றப்பட்டது.